RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 356 | டிசம்பர்.26 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மதச்சார்பு கட்டடங்களுக்கு என்.ஓ.சி., விலக்கு; கிறிஸ்துமஸ் விழாவில் முதல்வர் அறிவிப்பால் கட்டுமான துறை அதிர்ச்சி

சென்னை, டிச.26-

மதச்சார்பான கட்டடங்களுக்கு மாவட்ட கலெக்டரின் என்ஓசியை வலியுறுத்தாமல், திட்ட அனுமதி வழங்கப்படும் என கிறிஸ்துமஸ் விழாவில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்பால், பொது அமைதி பாதிக்கும் என, கட்டுமான துறையினர் கவலை தெரிவித்தனர்.

தமிழகத்தில் பொது கட்டட விதிகள் அடிப்படையில், கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதில் மதம் பயன்பாட்டுக்கான கட்டடங்கள் கட்டும்போது, அது அமையும் இடத்தில், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு என்ன பிரச்னை ஏற்படும் என்று பார்க்க வேண்டும். அதிக அளவில் மக்கள் வந்து செல்லும் வகையிலான கட்டடங்களை, குறுகலான இடத்தில் கட்டக் கூடாது. பொது ஒழுங்கு பாதிக்கப்படுமா என்பதை பார்த்து, மாவட்ட கலெக்டர் தடையின்மை சான்றிதழ் அளிக்க வேண்டும்.

கலெக்டரிடம் தடையின்மை சான்று பெறும் கட்டுப்பாடு இருக்கும்போதே, பல இடங்களில் மதச்சார்பு கட்டடங்களால் பிரச்னை ஏற்படுகிறது. சமீபத்திய உதாரணமாக, சென்னை அடுத்த தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட, குரோம்பேட்டை அஸ்தினாபுரம் அருகில், குறுகலான பகுதியில் எவ்வித அனுமதியும் இன்றி, அடுக்குமாடி கட்டடத்துடன் தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. இதில் விதிமீறல் என்பது உறுதியான நிலையில், இதை இடிக்க வேண்டும் என, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், சி.எம்.டி.ஏ., மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இடிக்காமல் உள்ளனர்.







அதனால், அந்த அதிகாரிகள் மீது, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும் பல இடங்களில், வெவ்வேறு மதங்களை சேர்ந்த வழிபாட்டு இடங்கள் அருகருகே அமைகின்றன. ஒரு மதத்தினர் விழாக்களுக்கு அரசு அதிகபட்ச ஆதரவு அளிப்பதும், இன்னொரு மதத்தினரின் விழாக்களை முடக்குவதும், மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

இத்தகைய சூழலில், பொது அமைதியை பாதிக்கும் இடங்களில், மதச்சார்பு கட்டடங்கள் அமைந்தால், மக்கள் மத்தியில் பிரச்னைகள் ஏற்படும். இந்நிலையில், கலெக்டரின் தடையின்மை சான்று இல்லாமல், மத கட்டடங்களை அனுமதிப்பதாக முதல்வர் அறிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது.

முதல்வர் அறிவிப்பு

சென்னை திருவிக நகரில் உள்ள டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: 2019ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை செயல்பட்டு கொண்டு இருக்கக்கூடிய, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டடம் விதிமுறைகள் 2019ன் படி உள்ள மதச்சார்பான கட்டடங்களுக்கு மாவட்ட கலெக்டரின் என்ஓசியை வலியுறுத்தாமல், திட்ட அனுமதி வழங்கப்படும். இந்த காலத்தில் திட்ட அனுமதி வேண்டி, விண்ணப்பித்து இருக்கும் மதச்சார்பான கட்டடங்களுக்கு இது பொருந்தும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கவுன்சில் தமிழக பிரிவு தலைவர் பி.மணிசங்கர் கூறியதாவது: குடியிருப்புகள், அலுவலக வளாகங்கள் கட்டும்போது, பக்கவாட்டில் காலியிடம் விட வேண்டும்; எப்.எஸ்.ஐ., எனப்படும் தளப்பரப்பு குறியீட்டை பார்க்க வேண்டும்; வாகன நிறுத்துமிடம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

ஆனால், மதச்சார்பு அடிப்படையில், வழிபாட்டு கட்டடங்கள் கட்டும்போது, அதில் வாகன நிறுத்துமிடங்கள், பக்கவாட்டு காலியிடங்கள் விடப்படுவது இல்லை. இத்துடன், குறுகலான பகுதியில், அதிக உயரத்துக்கு கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இந்த கட்டடங்கள் இடிந்து விழுந்தால், சம்பந்தமே இல்லாத மற்றவர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, வழிபாட்டு கட்டடங்களுக்கு, என்.ஓ.சி., விலக்கு அளிக்கக் கூடாது. இது தவறான பார்வையாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

விதிமீறல்களை ஊக்குவிக்கும் கட்டட அமைப்பியல் பொறியாளர் பி.பாலமுருகன் கூறியதாவது: பொது கட்டட விதிகள் வருவதற்கு முன்பிருந்தே, மத கட்டடங்கள் கட்ட, கலெக்டரிடம் தடையின்மை சான்று பெறுவது நடைமுறையில் உள்ளது. இந்த சான்று கேட்காமல் கட்டடங்களை அனுமதித்தால், அது மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்னைகளை ஏற்படுத்தும். தற்போது சிறிய அளவிலான தெருக்களிலும், 'ஜெப வீடு' என்ற பெயரில், குடியிருப்புகளில் மத ரீதியான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இது, அக்கம்பக்கத்தில் வசிப்போருக்கு பல்வேறு பிரச்னைகளை ஏற்படுத்துகின்றன. திருப்பரங்குன்றத்தில், ஒரு பிரிவினரின் கட்டடம் இருப்பதை காரணமாக கூறி, இன்னொரு பிரிவினர் தீபம் ஏற்றுவதை தடுத்துள்ளனர். இதனால், அங்கு மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. முதல்வரின் தற்போதைய அறிவிப்பு தவறான நோக்கத்தில் பயன்படுத்தப்பட்டால், தமிழகம் முழுதும் ஒரு மதத்தினரின் ஆட்சேபம் காரணமாக, இன்னொரு மதத்தினரின் வழிபாடுகள் முடக்கப்பட வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## சிறுபான்மையினர் வழிபாட்டு தலங்கள், உரிமைகளுக்கு முழுமையான பாதுகாப்பு தேவை: தவெக

சென்னை, டிச.26-

“இந்திய அரசியலமைப்புக்கு எதிராக தேவாலயங்கள், கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனம். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும்” என தவெக செய்தி தொடர்பாளர் ராஜ் மோகன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “அரசியல் ஆதாயத்துக்காக மக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் பிளவுவாத பாசிச சக்திகளை மக்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.

இந்தியாவின் ஆன்மாவாக விளங்கும் மதச்சார்பின்மையைக் கேள்விக்குறியாக்கும் வகையில், புனிதமான கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் நாட்டின் தலைநகர் டெல்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், கிறிஸ்துவ மக்கள் மற்றும் தேவாலயங்கள் மீது பிளவுவாத சக்திகளால் நிகழ்த்தப்பட்டுள்ள மத நல்லிணக்கச் சீர்குலைவுச் சம்பவங்கள் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அளிக்கின்றன.

நமது நாடு அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்துடன் வாழும் ஒரு புண்ணிய பூமி. அன்பையும் சமாதானத்தையும் போதிக்கும் கிறிஸ்துமஸ் நன்னாளில், வழிபாட்டுத் தலங்களிலும் பொது இடங்களிலும் அத்துமீறி நுழைந்து, வன்முறை அணுகுமுறைகளைக் கையாண்டு அச்சுறுத்துவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இத்தகைய செயல்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும்.

எனவே, இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்ட சமூக விரோதிகளை உடனடியாக அடையாளம் கண்டு, அவர்கள் மீது சட்டப்படி பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை ஒன்றிய மற்றும் அந்தந்த மாநில அரசுகள் எடுக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும். அரசியலமைப்புக்கு எதிராகக் கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கடும் கண்டனம்.

மதம் கடந்த மனித நேயமே வலிமையான தேசத்தை உருவாக்கும். தமிழக வெற்றிக் கழகம் எப்போதும் மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் உறுதுணையாக நிற்கும். பிளவுவாத அரசியலை முறியடித்து, மீண்டும் அமைதியும் சகோதரத்துவமும் தழைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்“ இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இளைஞர்களின் சக்தியால் நமது விண்வெளி திட்டம் மேலும் மேம்படும்: இஸ்ரோ குழுவினருக்கு பிரதமர் மோடி, அமித் ஷா வாழ்த்து

புதுடெல்லி, டிச.26-

அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக் கோளை வெற்றிகரமாக ஏவியதற்காக இஸ்ரோ குழுவினருக்கு பிரதமர் மோடியும் மத்திய அமைச்சர் அமித் ஷாவும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் கூறியிருப்பதாவது: எல்விஎம்3 ராக்கெட்டின் வெற்றி, உலகளாவிய ராக்கெட் வர்த்தக சந்தையில் இந்தியா வளர்ந்து வருவதை மீண்டும் நிரூபித்துள்ளது. இந்தியாவிலிருந்து மிக அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக் கோள் ப்ளூபேர்ட் பிளாக் 2 அதற்குரிய புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது, இந்திய விண்வெளி பயணத்தில் பெருமையான தருணம். அதிக எடையுள்ள செயற்கைக் கோள்களை ஏவும் இந்தியாவின் திறனை இது வலுப்படுத்தியுள்ளது. கடினமாக உழைத்த விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு வாழ்த்துகள்.

இந்திய இளைஞர்களின் சக்தியால், நமது விண்வெளி திட்டம் மேலும் மேம்படும். எல்விஎம்3 ராக்கெட் ஏவுதல் மூலம் நாம் நமது எதிர்கால ககன்யான் திட்டத்தையும் வலுப்படுத்துகிறோம். நமது திறன் மேம்பாடு, தன்னம்பிக்கைக்கான ஊக்குவிப்பு ஆகியவை வரும் தலைமுறையினருக்கு மிகச் சிறப்பானது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எக்ஸ் தளத்தில், “எல்விஎம் 3எம்6 ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவியதற்காக இஸ்ரோ குழுவினருக்கு வாழ்த்துகள். உலகம் முழுவதும் தகவல் தொடர்பை மேம்படுத்த அமெரிக்க செயற்கைக்கோள் புளூபேர்ட் பிளாக்2 விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது நமது விஞ்ஞானிகளின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவின் விண்வெளி திறன் வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றுள்ளது. விண்வெளி தொழில்நுட்பத்தின் உலகளாவிய மையமாக இந்தியா மாற வேண்டும் என்ற பிரதமர் மோடியின் தொலைநோக்கு திட்டம் நிறைவேறியுள்ளது’’ என பதிவிட்டுள்ளார்.

## திட்டக்குடி விவகாரத்துக்கு திமுக அரசே பொறுப்பேற்க வேண்டும்: அன்புமணி

சென்னை, டிச.26-

அரசு பேருந்துகளை முறையாக பராமரிக்காத திமுக அரசு, திட்டக்குடி விபத்துக்கும், உயிரிழப்புகளுக்கும் பொறுப்பேற்று உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “கடலூர் மாவட்டம் திட்டக்குடியை அடுத்த எழுத்தூர் என்ற இடத்தில் திருச்சியில் இருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசு விரைவு பேருந்தின் முன்பக்க டயர் வெடித்து சாலைத் தடுப்பை உடைத்து கொண்டு எதிர் திசையில் வந்து கொண்டிருந்த 2 கார்கள் மீது மோதியதில் கார்களில் பயணம் செய்த 9 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு விரைவுப் பேருந்தின் முன்பக்க டயர் வெடித்தது தான் விபத்துக்கு காரணம் ஆகும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் டயர்கள் வெடிக்கும் நிலையில் உள்ளன என்றால் எந்த அளவுக்கு மோசமான நிலையில் அரசுப் பேருந்துகள் பராமரிக்கப் படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பேருந்துகளை முறையாக பராமரிக்காத திமுக அரசு தான் இந்த விபத்துக்கும், உயிரிழப்புகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அன்புமணி கூறியுள்ளார்.

## நூறு நாள் வேலைத் திட்ட பெயர் மாற்றத்தை கண்டித்து திமுக கூட்டணி கட்சித் தலைவர்கள் ஆர்ப்பாட்டம்

காஞ்சி/செங்கை/ திருவள்ளூர், டிச.26-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மத்திய அரசு விபி ஜிராம்ஜி என பெயர் மாற்றம் செய்துள்ளது. இதை கண்டித்து திமுக கூட்டணிக் கட்சியினர் காஞ்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத், உத்திரமேரூர், குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 ஒன்றிய அலுவலகங்கள் முன்பாக இந்த போராட்டங்கள் நடைபெற்றன.

வாலாஜாபாத் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதேபோல், தாம்பரம் அடுத்த மேடவாகத்தில், திமுக கூட்டணி கட்சிகள் சார்பில், திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், திமுக கூட்டணி கட்சி தலைவர்களான கி.வீரமணி, கே. பாலகிருஷ்ணன், மு.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன், வைகோ, ஜவாஹிருல்லா, காதர் மொகைதீன், தி.வேல்முருகன், ஈ.ஆர்.ஈஸ்வரன், மற்றும் எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கனிமொழி சோமு மற்றும் திமுக எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல், திருவள்ளூர் மாவட்டத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் நேற்று மத்திய அரசுக்கு எதிராக 31 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், பூந்தமல்லி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எம்எல்ஏ சந்திரன், திருவள்ளூர் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ரமேஷ்ராஜ் உள்ளிட்ட சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்று, மத்திய அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

இதற்கிடையே, முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப்பதிவு: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை மீட்டெடுக்கவும், தங்களது வாழ்வாதாரத்தைக் காத்துக்கொள்ளவும் தமிழகம் முழுவதும் 389 இடங்களில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

இது தமிழகத்தில் இருந்து ஒலிக்கும் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல் என்பதை, அண்ணல் காந்தியின் மீது வெறுப்புணர்வோடு செயல்படும் மத்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை காப்போம். விபிஜிராம்ஜியை திரும்ப பெறுங்கள். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.



# மகா பிரபு வின் விருந்து நூல் வெளியீடு

சிவகங்கை, டிச.26-

சிவகங்கை மாவட்ட எழுத்தாளர், கவிஞர் மகா பிரபு தனது ஆசிரியர் பணியுடன் இலக்கியப் பணியையும் செய்து வருகிறார். அறிவியல் ஆசிரியரான அறிவியல் மனப்பான்மையை மாணவர்களிடமும், சமுதாயத்திற்கும் கொண்டு செல்லும் முனைப்போடு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு தமிழ் மீது கொண்ட ஆர்வம் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் பதிமூன்று நூல்களை எழுதியுள்ளார். சமீபத்தில் ஆசிரியர்களின் துணையுடன் தனது பள்ளி மாணவ மாணவிகளை கீழடி அரசு அருங்காட்சியகம், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் சென்ற இவர் தனது விருந்து நூலை கீழடி அரசு அருங்காட்சியகம் முன்பாக வெளியிட்டார்.



இந்நூலை ஆசிரியர்கள் கற்பகவல்லி உமாராணி அமுதா மாரிமுத்து பெற்றுக் கொண்டனர். ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் முன்னிலையில் நூல் வெளியிட்டது மிகுந்த உற்சாகமாளிப்பதாக மகா பிரபு தெரிவித்தார். இது இவரது முதலாவது தனிக்கட்டுரை நூல் என்பதும், இந்த ஆண்டு இவர் வெளியிட்ட பத்தாவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. உறவுகள், மனிதம், காசு பணம் துட்டு, சவாலே சமாளி ஆகிய தொகுப்புக் கட்டுரை நூல்களையும், வயநாடு, பட்டாசு, அழகி ஆகிய கவிதை நூல்களையும், மிஸ்டர் அவசரம், மகாராஜா என்கிற நுண்கதை நூல்களையும் எழுதியுள்ளார். இவரது வெளியீடுகளில் சிதறு தேங்காய் என்ற ஹைக்கூ நூலும், யாரடி நீ மோகினி என்ற சிறுகதை நூலும் அடங்கும். மாணவர்களின் பயன்பாட்டிற்காக டிப்ஸ் அண்ட் சிப்ஸ் என்கிற ஆங்கில நூலும் இவரது வெளியீடுகளில் முக்கியமான ஒன்றாகும்.

# எஸ்என்வி குளோபல் பள்ளியின் 5வது ஆண்டு விழா கோலாகல கொண்டாட்டம்

கோவை, டிச.26-

கோவை, ஆர்.எஸ்.புரம், எஸ்.என்.வி. குளோபலின் நட்சத்திரங்கள் தங்கள் 5வது ஆண்டு விழாவின் போது ஒரு அற்புதமான கலாச்சார நிகழ்ச்சியை வழங்கினர். இந்த நிகழ்வில் படைப்பாற்றல், கற்பனை மற்றும் பல்வேறு வகையான பன்முகத்தன்மையைக் குறிக்கும் சுவாரஸ்யமான செய்திகள், மாணவர்களின் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகள் மூலம் பிரகாசிக்கப்பட்டன.



நாகாலாந்து முதல் ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசம் வரை கேரளா வரை இந்தியாவின் வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாரம்பரிய நடனங்கள் மூலம் வெளிப்படுத்தி எஸ் என் விகுளோபல் பார் தே நேஷசன்என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டது.

பூர்ண மகா கும்பம் பற்றிய நாடகம், மத முக்கியத்துவம் மற்றும் நம்பிக்கையுடன் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.

இதில் தலைமை விருந்தினராக மதுரை தியாகராஜர் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ராஜா கோவிந்தசாமி (ஓய்வு பெற்ற பேராசிரியர்) பொதுத்தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ் வழங்கினார், 100% வருகை ஈட்டிய மாணவர்களுக்கும், நூறு சதவீத மதிப்பெண் பெற்றுதந்த ஆசிரியர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்

பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடம் உரையாற்றிய அவர், எதிர்கால இலக்குகளை அடையவும், 2047 க்கு முன்னர் வளர்ந்த இந்தியாவுக்காக உழைக்கவும் மாணவர்களை திறன்களால் தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் திறன்களை வழங்கியதற்காக நிர்வாகத்திற்கு அவர் நன்றி தெரிவித்தார்

குழந்தைகளின் திறமைகளை வளர்க்க தனி அக்கறை மற்றும் ஆதரவை வழங்கியதற்காக ஆசிரியர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

பள்ளியின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சிறப்பாக மற்றும் அயராத உழைப்பை வழங்கிய முதல்வர் டாக்டர் சாம்சன் செல்லதுரை மற்றும் ஊழியர்களை பள்ளி தலைவர் ஸ்ரீ மகாவீர் போத்ரா வெகுவாக பாராட்டினார்.

இந்த விழாவில் துணைத் தலைவர் ஸ்ரீ கமலேஷ் பாஃப்னா, செயலாளர் ஸ்ரீ கோபால் புராடியா, இணைச் செயலாளர் சித்தார்த் பாஃப்னா மற்றும் எஸ்என்வி மெட்ரிக்பள்ளி மற்றும் எஸ்என்எம்வி கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நடத்தும் கோயம்புத்தூர் நலச் சங்கத்தின் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் வாழ்நாள் உறுப்பினர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தாராபுரம், மெட்ரோ சிட்டியில்... வழக்கறிஞர் கிருட்டிணக்குமார் ஆசிரியை சுமித்ரா ஆகியோரின் " ஈ.வே.ரா " இல்லம் திறப்புவிழா இன்று (25/12/2025) மதியம் திராவிடர் விடுதலை கழகம் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமையில் நடந்தது. நிகழ்வில் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராசு, வழக்கறிஞர்கள் செல்வராசு, இராசேந்திரபாபு, சிவக்குமார், ஐயப்பன், பன்னீர்செல்வம், காட்டாறு குழுவினர், தாமரைகண்ணன், புரட்சிக்கொடி, பழனி ஜவகர், பழ.முருகேசன், காங்கேயம் பாண்டியன், மற்றும் திராவிடர் அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் திரளாக பங்கேற்றுச் சிறப்பித்தனர். தி.வி.க தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விடையளித்தார்., மேலும் வரும் திங்கள்கிழமை ( 29/12/2025) கோவையில் நடைபெற உள்ள, "ஜாதிய தீண்டாமைக்கு எதிரான மாபெரும் போராட்டம் "குறித்து விரிவாக எடுத்து கூறினார்., விழாவினை திருவள்ளுவர் படிப்பகம் வே.ப.இராசாமணி ஒருங்கிணைத்தார்.



# தூய்மை பணியாளர்கள் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் அறுசுவை உணவு

தாம்பரம், டிச.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சமத்துவ கிறிஸ்மஸ் பெருவிழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளரும், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களின் அறிவுறுத்தலின்படி பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் அவர்களின் தலைமையில் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப.விஜய் அவர்களின் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்கள் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் அறுசுவை உணவும் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், ஆர்.செல்வகுமார், எஸ்.கார்த்திக், ஆர்.ஜீவன் ஆர்.சஞ்சீவி, ஸ்ரீதர்குமார், ஆர்.சீனா, மு.வினோத், விக்கி (எ) ரி.ஷி.யுவராஜ், தேவன், கடப்பேரி ராஜா, எல்காட் சீனு, இ.நவீன், வாட்டர் மோகன், கணபதி, ரவி, நரேன், ரமேஷ், குருமணி, லஷ்மி, வனஜா, தழிழன்ஹரி, மனோஜ், மூர்த்தி , கிஷோர், ஏழுமலை, சந்தோஷ், மகேஷ், சின்ராசு, இளையராஜா, ஜெய், குட்டி, சுகன், லோகு, தினேஷ், அஜித்குமார், கேசவன்,சூரியா மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள குடிநீர் நீர்த்தேக்க தொட்டி ஆபத்தான நிலையில் உள்ளதால் விரைந்து அப்புறப்படுத்த அப்ப பகுதி பொதுமக்கள் கோரிக்கை



# "தமிழ்நாட்டில் மத அரசியல் செய்வது திமுக தான்" - அண்ணாமலை குற்றச்சாட்டு

கோவை, டிச.26-

இந்து பண்டிகைகளுக்கு மட்டும் வாழ்த்து தெரிவிக்காமல் தமிழ்நாட்டில் மத அரசியல் செய்வது திமுக தான் என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 101வது பிறந்த நாள் முன்னிட்டு அவரின் சாதனைகள் குறித்த கருத்தரங்கு கோவை நவஇந்தியா பகுதியில் அமைந்துள்ள தனியார் கலையரங்கில் இன்று மாலை நடந்தது. இதில் பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் அதிகம் விபத்துக்கள் ஏற்படுவது மிகவும் கவலையளிக்கிறது. பேருந்துகளின் தரத்தை முறையாக அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

கிறிஸ்துமஸ் விழாவில் தாக்குதல் நடத்தப்படும் சம்பவம் மிகப்பெரிய குற்றம். விரும்பத்தகாத வருத்தப்படக்கூடிய செயல்கள் ஆகும். இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் பிரதமர் டெல்லியில் சர்ச் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார். அதை விட நாட்டிற்கு என்ன செய்தியை பிரதமர் கூற முடியும். தேர்தலுக்கு 3 மாதங்கள் உள்ளதால் தேசிய ஜனநாயக கூட்டணியில் எந்த கட்சிகள் இடம் பெறுவார்கள் என்பதை பொருத்திருந்து பார்க்க வேண்டும். வலிமையாக தேர்தல் களத்தில் பெரியளவில் வெற்றி பெறுவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் பார்த்து கொண்டுள்ளோம்.

'எஸ்ஐஆர்' பணிகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 கோடியே 41 லட்சம் பேர் வாக்காளர் பட்டி யலில் இருக்கும் போது, சில தவறுகள் நடப்பது சகஜம்தான். நியாமானவர்களை சேர்க்க வேண்டும் என்றால் அவசியம் சேர்த்து கொள்ள வேண்டும். திமுக கடைசி 100 நாட்கள் ஆட்சியில் இருப்பார்கள். அதற்கு பின் தூக்கி ஏறிப்படுவது உறுதி. இந்து பண்டிகைகளுக்கு மட்டும் வாழ்த்து தெரிவிக்காமல் தமிழ்நாட்டில் மத அரசியல் செய்வது திமுக தான்.

ஆண்டுதோறும் கன்னியாகுமரியில் அரண்மனை கிறிஸ்துமஸ் விழா நடப்பது வழக்கம். இந்தாண்டு திமுக செல்லவில்லை. தவெகவை அழைத்துள்ளதால் நாங்கள் பங்கேற்கவில்லை என்கின்றனர். பாஜக கிறிஸ்துமஸ், ஈகை பண்டிகை போன்ற அனைத்து மத பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகையில் தாக்குதல் நடத்தியதையும் கண்டிக்கிறோம். எனவே பாஜக மத அரசியல் செய்வதில்லை.

பாஜக படிப்படியாக தலைவர்கள் உழைத்து பாக முகவர்கள் எண்ணிக்கையை 63 ஆயிரமாக உயர்த்தியுள்ளனர். தேர்தல் ஆணைய இணையதளத்தில் 5,000 எண்ணிக்கை குறைவாக உள்ளது. தேமுதிக, அமமுக, அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் மீதும் மரியாதை உள்ளது. யாரும் அவசரப்பட்டு எதுவும் பேச வேண்டிய கட்டாயம், அவசியம் இல்லை" இவ்வாறு அண்ணாமலை தெரிவித்தார்.

# கொம்பு சீவி" படம் பார்க்க நடிகர் சண்முக பாண்டியன் அனகாபுத்தூர் வருகை தேமுதிக செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது

அனகாபுத்தூர், டிச.26-

தேமுதிக நிறுவன தலைவரும் நடிகருமான மறைந்த புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மகன் சண்முக பாண்டியன் நடித்த "கொம்பு சீவி" திரைப்படம் டிசம்பர் 19ஆம் தேதி அன்று திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.

கேப்டனை போன்று திரை உலகில் சிறப்பாக நடித்து வரும் அவரது மகன் சண்முக பாண்டியன் திரைப்படத்தைக் காண கேப்டனின் ரசிகர்கள் தேமுதிக தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமான திரையரங்குகளில் குவிந்து வருகின்றனர்.

தமிழக முழுவதும் பல்வேறு திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் சண்முக பாண்டியன் நடித்த "கொம்பு சீவி" திரைப்படம் ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

டிசம்பர் 19 இல் இருந்து தொடர்ந்து 5 நாட்களாக வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் "கொம்பு சீவி" திரைப் படத்தை ரசிகர்களுடன் சேர்ந்து காண



டிசம்பர் 24ஆம் தேதி அன்று மாலை சென்னை பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூர் கணேஷ் திரையரங்கிற்கு நடிகர் ஷண்முகபாண்டியன் வருகை தந்தார்

படம் பார்க்க அனகாபுத்தூருக்கு வந்த நடிகர் சண்முக பாண்டியனுக்கு செங்கல்பட்டு மாவட்ட தேமுதிக செயலாளர் அனகை. முருகேசன் தலைமையில் தேமுதிகவினர் நையாண்டி மேளம் இசை முழங்க, கரகாட்டம், ஒயிலாட்ட நடன கலைஞர்களின் கலை நிகழ்ச்சியுடன், பட்டாசு, வான வேடிக்கைகள் வெடித்து, பூரணகும்ப மரியாதை அளித்து, ரோஜா பூ மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

அதைத்தொடர்ந்து கணேஷ் திரையரங்கத்தில் ரசிகர்கள் மற்றும் பொதுமக்களுடன் அமர்ந்து நடிகர் சண்முக பாண்டியன் படம் பார்த்து மகிழ்ந்தார்.

இதில் அனகாபுத்தூர் பகுதி தேமுதிக செயலாளர் அனகை.மகாதேவன், தாம்பரம் மாநகர தெற்கு பகுதி செயலாளர் கேட்.எம்.தர்மா, கேப்டன் மன்ற செயலாளர் ஊரப்பாக்கம் மூர்த்தி, நெரும்பூர் ராஜேந்திரன் உள்ளிட்ட மற்றும் தேமுதிக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, நிர்வாகிகள், தொண்டர்கள், கேப்டனின் ரசிகர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு நடிகர் சண்முக பாண்டியனுடன் படம் பார்த்து மகிழ்ந்தனர்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த நடிகர் சண்முகபாண்டியன் கூறுகையில்

மக்களுடன் சேர்ந்து படம் பார்ப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

எனது அப்பா கேப்டன் அவர்களுக்கு எப்படி மக்கள் வரவேற்பு அளித்தனரோ அதேபோன்று எனது திரைப்படத்தைக் காண பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்துள்ளனர்.

அதற்கு எனது மனமார்ந்த நன்றிகள் அனகாபுத்தூருக்கு படம் பார்க்க வந்த என்னை சிறப்பான முறையில் ரசிகர்கள் தேமுதிகவினர் வரவேற்றனர்.

மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தந்தைக்கு எப்படி மரியாதை வரவேற்பு அளித்தார்களோ அதே போன்று எனக்கும் இந்த மரியாதை அளித்த மாவட்டச் செயலாளர் அனகை.முருகேசன் மற்றும் தேமுதிக ரசிகர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து பல்வேறு படங்களில் நடிக்க உள்ளேன்.

எனது தந்தை போன்று காவல்துறை வேடத்திலும் நடிக்க ஆர்வம் உள்ளது. அதற்கான வாய்ப்பை எதிர்பார்த்து கொண்டிருக்கிறேன்.

அனைவரும் தவறாமல் கொம்பு சீவி திரைப்படத்தை தியேட்டர்களில் வந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

# மரணம் எப்போது, எப்படி வரும்... துல்லியமாக கணித்து சொல்லும் அதிசய கோவில்

இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி அதிசயிக்க வைக்கும் மர்மமான பல ஆலயங்கள் உள்ளன. அப்படி ஒருவருடைய வாழ்க்கை மட்டுமின்றி மரணம் கூட எப்போது நடக்கும் என்பதை மிக துல்லியமாக கணித்து சொல்லும் ஒரு அதிசய கோவில் உள்ளது. அது மட்டுமல்ல வாழ்க்கையில் இருக்கும் பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு சில எளிய பரிகாரங்களையும் சொல்லி, அவற்றை தீர்க்க ஆன்மீக ரீதியாக வழியும் காட்டுகிறார்கள்.

உங்களின் கடந்த காலம், நிகழ்காலம் மட்டுமல்ல உங்களுக்கு எப்போது, எப்படி மரணம் நிகழும் என்பதை கூட துல்லியமாக சொல்லும் ஒரு கோவில் உள்ளது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? உண்மை தான் இப்படிப்பட்ட அதிசய கோவில் நம்முடைய தமிழ்நாட்டில் தான் உள்ளது. அந்த அதிசய கோவில் வேறு எதுவும் கிடையாது. வைத்தீஸ்வரன் கோவில் தான்.

பொதுவாக வைத்தீஸ்வரன் கோவில் என்றால் அனைவருக்கும் நினைவிற்கு வருவது நாடி ஜோதிடம் தான். இன்று வாழும் ஒருவருடைய வாழ்க்கையில் என்ன நடக்கும் என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓலை சுவடிகளில் எழுதி வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த ஓலைச்சுவடிகள் சாதாரண மனிதர்களால் எழுதப்பட்டது கிடையாது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முனிவர்கள், ரிஷிகளால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானவை அகத்திய முனிவரால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஒருவரின் தலைவிதி எப்படி இருக்கும் என்பதை அவர் பிறப்பதற்கு முன்பே எழுதி வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

அது எப்படி ஒருவரின் வாழ்க்கை, தலைவிதியை பற்றி அவர் பிறப்பதற்கு முன்பே எழுதி வைக்க முடியும்? அனைவருக்கும் அவர்களுக்கான ஏடு இருக்குமா? என்ற கேள்வி தோன்றலாம். இப்படி ரிஷிகளால் எழுதி வைக்கப்பட்ட ஏடுகள் எனப்படும் ஓலைச்சுவடிகள், யார் ஒருவருக்கு நாடி ஜோதிடம் பார்க்க வேண்டும் என்ற விதி இருக்கிறதோ அவர்களுக்கு மட்டுமே ஏடுகள் எடுத்தப்பட்டு இருக்கும். மற்றவர்களுக்கு இருக்காது என சொல்லப்படுகிறது. கை விரல் ரேகையை மட்டும் வைத்து இந்த ஏடுகள் எடுக்கப்பட்டு, அவற்றில் அந்த நபரின் பெயர், பெற்றோர் பெயர் உள்ளிட்ட சில முக்கிய, அடிப்படை விஷயங்கள் மட்டும் சரி பார்க்கப்பட்டு, துல்லியமாக அவர்களின் வாழ்க்கை பற்றி விபரங்களை சொல்கிறார்கள்.

நாடி ஜோதிடத்தில் பல காண்டங்களாக பிரித்து பலன் சொல்லுவார்கள். இவற்றில் ஆயுள் காண்டம் என்ற ஒரு உள்ளது. அதில் உங்களின் வாழ்நாள், உங்களுக்கு மரணம் எப்போது, எப்படி ஏற்படும் இருக்கும் என்பதை கூட சொல்கிறார்கள். அப்படி சொல்லப்படும் பலன்கள் மிகச் சரியாக, உண்மையாக இருப்பதாக பலரும் சொல்கிறார்கள். இது கணிப்புகள் மட்டுமல்ல சில பிரச்சனைகளுக்கு இங்குள்ள ஜோதிடர்களும், கோவில் புரோகிதர்களும் பரிகாரங்களும் சொல்கிறார்கள். தானம் அளிப்பது, மந்திரங்கள் சொல்லுவது, ராசி கற்கள் அணிந்து கொள்வது போன்ற பிரச்சனைகளை தீர்க்கும் பரிகாரங்களையும் சொல்கிறார்கள்.

வைத்தீஸ்வரன் கோவில் நாடி ஜோதிடம் பார்ப்பதற்கான ஊர் மட்டுமல்ல இங்குள்ள சிவன் கோவிலும் தனித்துவமானது தான். இந்த ஊர் சிவனுக்கு வைத்தீஸ்வரன், வைத்தியநாத சுவாமி என்ற பெயர்கள் உள்ளன. அவரது பெயராலேயே இந்த ஊர் வைத்தீஸ்வரன் கோவில் என அழைக்கப்படுகிறது. வைத்தீஸ்வரன் என்றால் குணமாக்கும் கடவுள் என்று பெயர். பல காலமாக தீராத உடல் நோய்கள் தீர ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து வேண்டிக் கொள்கிறார்கள். இது நவகிரக பரிகார தலங்களில் செவ்வாய் கிரகத்திற்குரிய தலமாக விளங்குகிறது.

இக்கோவிலில் உள்ள தீர்த்தத்தில் நீராடினால் பாவங்களும், தோல் நோய்களும் நீங்குவதாக நம்பிக்கை. இங்குள்ள குளத்தில் வெல்லத்தை கரைத்து வழிபட்டால் உடலில் ஏற்படும் கட்டிகள், தீராத பிரச்சனைகள் தீரும் என்பதும் நம்பிக்கையாக உள்ளது. பலர் இந்த கோவிலில் ருத்ர அபிஷேகம், சிவலிங்கத்திற்கு நெய், பால் உள்ளிட்ட பொருட்களால் அபிஷேகம் செய்தும் வழிபடுகிறார்கள். இப்படி வழிபடுவதால் நோய்கள், பிரச்சனைகள் நீங்குவதுடன், இறை அருளால் பாதுகாப்பும் கிடைப்பதாக நம்பிக்கை.

# புதன்கிழமையில் இந்த 5 கலரில் உடை உடுத்திப் பாருங்க...அதிர்ஷ்டம் உங்களை தேடி வரும்



பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள். மிகவும் மங்களகரமான நாளாக கருதப்படும் புதன்கிழமை, நமக்கு அதிர்ஷ்டம் தரும் நாளாக அமைய சில எளிய பரிகாரங்களை செய்யலாம். புதன்கிழமையில் பச்சை நிறம் தவிர, வேறு என்னென்ன நிறங்களில் உடை உடுத்தினாலோ அல்லது அந்த நிறங்களை அதிகம் பயன்படுத்தினாலோ அதிர்ஷ்டத்தை ஈர்க்க முடியும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக ஒவ்வொருவரும் அவர்களின் ராசி மற்றும் பிறந்த தேதியின் அடிப்படையில் அதிர்ஷ்ட நிறங்களை தெரிந்து கொண்டு, அந்த நிறத்தில் அடிக்கடி ஆடை உடுத்துவார்கள். சில முக்கியமான வேலைகளுக்கு செல்லும் போதும் அந்த நிறத்திலேயே ஆடை அணிவார்கள். இது தவிர பிடித்த கலர்கள் என சில இருக்கும். ஆனால் சில நிறங்களை ஒரு குறிப்பிட்ட நாளில் பயன்படுத்தும் போது அது அதிர்ஷ்டத்தை அதிக அளவில் நமக்கு அள்ளித் தரும்.

புதன்கிழமை என்பது புதன் பகவானுக்குரிய நாளாகும். புத்திகாரகன் என சொல்லப்படும் புதன் பகவான் தான் தொழிலில் லாபம், அதிர்ஷ்ட வாய்ப்புகள், பொன் பொருள் சேர்க்கை ஆகியவற்றிற்கும் காரணமானவர். அதனால் புதன்கிழமையில் புதனுக்குரிய பச்சை நிறத்தை மட்டுமே பலரும் விரும்புவார்கள். ஆனால், ஜோதிட சாஸ்திரப்படி புதன் பகவானின் அருளைப் பெற பச்சை தவிர வேறு சில வண்ணங்களும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். உங்கள் புத்திசாலித்தனம், வெற்றி மற்றும் முன்னேற்றத்தை அதிகரிக்க இந்த நிறங்கள் துணை செய்யும். புதன்கிழமைகளில் பச்சை தவிர வேறு எந்த 5 நிறங்களை பயன்படுத்தினால் அதிர்ஷ்டம் பெருகும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

புதன்கிழமை அணிய வேண்டிய 5 அதிர்ஷ்ட நிறங்கள்:

1. பிஸ்தா பச்சை (Pistachio Green): வழக்கமான பச்சை நிறத்திற்கு மாற்றாக பிஸ்தா பச்சை நிறத்தை அணியலாம். இந்த நிறம் மனதிற்குப் புத்துணர்ச்சியையும் புதிய ஆற்றலையும் தருகிறது. நீண்ட நாட்களாக சோம்பலாக உணர்பவர்கள் அல்லது வேலையில் ஆர்வம் இல்லாதவர்கள் இந்த நிறத்தை அணிந்தால், அன்றைய நாள் முழுவதும் உற்சாகமாகச் செயல்பட முடியும்.

2. மஞ்சள் (Yellow): புதன்கிழமை என்பது விநாயகப் பெருமானுக்கு உகந்த நாளாகும். விநாயகருக்கு மிகவும் பிடித்தமான நிறங்களில் ஒன்று மஞ்சள். வீட்டில் செல்வச் செழிப்பு உண்டாகவும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவவும் இந்நாளில் மஞ்சள் நிற ஆடைகளை அணியலாம். இது உங்கள் காரியங்களில் உள்ள தடைகளை நீக்க உதவும்.

3. வான நீலம் (Sky Blue): வானத்தைப் போன்ற தெளிவையும் அமைதியையும் தரும் இந்த நிறம், உங்கள் தகவல் தொடர்புத் திறனை (Communication Skills) மேம்படுத்தும். மற்றவர்களுடன் அதிகம் பேச வேண்டிய துறையில் இருப்பவர்களுக்கு இந்த நிறம் மிகுந்த அதிர்ஷ்டத்தைத் தரும்.

4. க்ரீம் அல்லது சந்தன நிறம் (Cream/Off-White): அடர்வான நிறங்கள் பிடிக்காதவர்கள் க்ரீம் அல்லது சந்தன நிற ஆடைகளைத் தேர்ந்தெடுக்கலாம். இந்த நிறம் உங்கள் ஆளுமையை அமைதியாகவும் கௌரவமாகவும் மாற்றும். சமூகத்தில் உங்கள் பேச்சிற்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்க இது உதவும்.

5. வெள்ளை (White): அமைதி மற்றும் உண்மையின் அடையாளமாக வெள்ளை நிறம் கருதப்படுகிறது. வேலையில் அதிக மன அழுத்தம் அல்லது நிம்மதியற்ற சூழலை உணருபவர்கள் புதன்கிழமை அன்று வெள்ளை நிறத்தை அணிவது நல்லது. இது உங்கள் மனதை ஒருநிலைப்படுத்தி, தெளிவான சிந்தனையுடன் பணிகளை முடிக்க உதவும்.

# பிஹார் அணி 574 ரன்கள் குவித்து சாதனை: டி வில்லியர்ஸின் சாதனையை தகர்த்தார் வைபவ் சூர்யவன்ஷி



விஜய் ஹசாரே ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் அருணாச்சல பிரதேச அணிக்கு எதிரான ஆட்டத்தில் 574 ரன்கள் குவித்து பிஹார் அணி உலக சாதனை படைத்தது.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த பிஹார் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 574 ரன்கள் குவித்து உலக சாதனை படைத்தது. இதற்கு முன்னர் லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் கடந்த 2022ம் ஆண்டு இதே அருணாச்சல் பிரதேச அணிக்கு எதிராக தமிழ்நாடு அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 506 ரன்கள் குவித்ததே சாதனையாக இருந்தது.

இதை தற்போது முறியடித்து புதிய சாதனையை படைத்துள்ளது பிஹார் அணி. பிஹார் அணியில் 14 வயதான தொடக்க வீரரான வைபவ் சூர்யவன்ஷி 84 பந்துகளில், 15 சிக்ஸர்கள், 16 பவுண்டரிகளுடன் 190 ரன்கள் விளாசினார். அவர், தனது சதத்தை 36 பந்துகளில் விளாசியிருந்தார். மேலும் 150 ரன்களை 59 பந்துகளில் கடந்தார்.

இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் 150 ரன்களை விளாசியிருந்த தென் ஆப்பிரிக்க அணியின் முன்னாள் வீரரான ஏபி டிவில்லியர்ஸின் சாதனையை முறியடித்தார் வைபவ் சூர்யவன்ஷி. டி வில்லியர்ஸ் 2015ம் ஆண்டு உலகக் கோப்பை தொடரில் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 64 பந்துகளில் 150 ரன்களை விளாசியிருந்தார்.

அருணாச்சல பிரதேச அணிக்கு எதிரான ஆட்டத்தில் கேப்டன் சகிபுல் கானி 32 பந்துகளில், 12 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகளுடன் 128 ரன்கள் விளாசி மிரட்டினார். அவர், தனது சதத்தை 32 பந்துகளில் விளாசி அசத்தினார். இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் சதம் விளாசிய இந்திய வீரர் என்ற சாதனையை சகிபுல் கானி படைத்தார். இதற்கு முன்னர் இதே அருணாச்சல பிரதேச அணிக்கு எதிராக பஞ்சாப் அணியின் அன்மோல்பிரீத் சிங் 35 பந்துகளில் சதம் விளாசியதே சாதனையாக இருந்தது. மேலும் சகிபுல் கானியின் சதம் லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் உலக அரங்கில் 3வது விரைவான சதமாகவும் அமைந்தது.

இந்த வகை சாதனையில் தாஸ்மேனியா அணிக்கு எதிராக ஜேக் பிரேசர் மெக்கர்க் 29 பந்துகளில் சதம் விளாசி முதலிடத்தில் உள்ளார். 2015ம் ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக டி வில்லியர்ஸ் 31 பந்துகளில் சதம் விளாசி 2வது இடத்தில் உள்ளார்.

சகிபுல் கானிக்கு உறுதுணையாக விளையாடிய விக்கெட் கீப்பர் ஆயுஷ் லோஹருகா 56 பந்துகளில், 8 சிக்ஸர்கள், 11 பவுண்டரிகளுடன் 116 ரன்கள் விளாசி அசத்தினார். இதன் விஜய் ஹசாரே தொடரில் ஒரு இன்னிங்ஸில் 3 சதங்களை விளாசிய முதல் அணி என்ற சாதனையையும் பிஹார் அணி படைத்தது.

அருணாச்சல பிரதேச அணி தரப்பில் மிபோம் மோசு 9 ஓவர்களை வீசி 116 ரன்களை தாரைவார்த்தார். இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக்கெட் போட்டியில் அதிக ரன்களை வழங்கிய வீரர் என்ற மோசமான சாதனையை படைத்தார். இதற்கு முன்னர் 2023ம் ஆண்டு உலகக் கோப்பை தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் நெதர்லாந்தின் பாஸ் டி லீட் 115 ரன்களை விட்டுக்கொடுத்திருந்தார்.

575 ரன்கள் இலக்குடன் பேட் செய்த அருணாச்சல பிரதேச அணி 42.1 ஓவர்களில் 177 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. கம்ஷா யங்போ 32, டெக்கி நேரி 28, டெக்கி டோரியா 28 ரன்கள் சேர்த்தனர். பிஹார் அணி சார்பில் ஆகாஷ் ராஜ், சுராஜ் காஷ்யப் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். 397 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பிஹார் அணி 4 புள்ளிகளை பெற்றது.



# ஆஸி. வீரர் டேவிட் வார்னர் சாதனையை சமன் செய்தார் ரோஹித் சர்மா

விஜய் ஹசாரே ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை சிக்கிம் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த சிக்கிம் 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 236 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஆஷிஸ் தாபா 79, சாய் சாத்விக் 34, கிரந்தி குமார் 34, ராபின் லிம்போ 31 ரன்கள் சேர்த்தனர். மும்பை அணி தரப்பில் ஷர்துல் தாக்குர் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

237 ரன்கள் இலக்குடன் பேட் செய்த மும்பை அணி 30.3 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

201718ம் ஆண்டு சீசனுக்கு பிறகு விஜய் ஹசாரே போட்டியில் களமிறங்கிய இந்திய அணியின் சீனியர் பேட்ஸ்மேனான ரோஹித் சர்மா 94 பந்துகளில், 9 சிக்ஸர்கள், 18 பவுண்டரிகளுடன் 155 ரன்கள் விளாசினார். அவர், தனது சதத்தை 62 பந்துகளில் எட்டியிருந்தார்.

லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் ரோஹித் சர்மா 150 ரன்களை குவிப்பது இது 9வது முறையாகும். இதன் மூலம் இந்த வகையிலான சாதனையில் அதிக முறை 150 ரன்களை விளாசியிருந்த ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான டேவிட் வார்னரின் சாதனையை ரோஹித் சர்மா சமன் செய்துள்ளார். இருவரும் தலா 9 முறை 150 ரன்களுக்கு மேல் விளாசி உள்ளனர்.

சிக்கம் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சதம் விளாசியதன் மூலம் விஜய் ஹசாரே தொடரில் அதிக வயதில் சதம் விளாசிய 2வது வீரர் என்ற சாதனையையும் ரோஹித் சர்மா படைத்தார். அவருக்கு 38 வயது ஆகிறது. இந்த வகையில் கடந்த 202324ம் ஆண்டு சீசனில் பெங்கால் அணியின் அனுஸ்டுப் மஜும்தார் தனது 39 வயதில் 2 சதங்களை விளாசி முதலிடத்தில் உள்ளார்.சிக்கிம் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய ரோஹித் சர்மா.





# சிவாஜியின் பேச்சு: நிதி அகர்வால் மறைமுக பதிலடி

சிவாஜியின் பேச்சை முன்வைத்து தன்னிடம் கேள்வி எழுப்பியவர்களுக்கு நிதி அகர்வால் மறைமுகமாக பதிலடி கொடுத்துள்ளார்.

'கோர்ட்' படத்தில் தனது நடிப்பின் மூலம் அனைவரது பாராட்டையும் பெற்றவர் சிவாஜி. சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பெண்கள் அணியும் உடைகள் குறித்து பேசி சர்ச்சையில் சிக்கினார். "நாயகிகள் கண்டபடி உடைகள் அணிந்தால் நீங்கள் தான் சிக்கலை சந்திக்க வேண்டி வரும்" என்று குறிப்பிட்டார் சிவாஜி. இந்தப் பேச்சினை முன்வைத்து நிதி அகர்வாலை இணையத்தில் கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள்.

ஏனென்றால் 'தி ராஜா சாப்' விழா ஒன்றில் ரசிகர்களுக்கு இடையே சிக்கிக் கொண்டார் நிதி அகர்வால். இந்த வீடியோ பதிவு இணையத்தில் பெரும் வைரலானது. இதனிடையே சிவாஜியின் பேச்சை வைத்து தன்னை கேள்வி எழுப்பவருக்கு மறைமுகமாக பதிலளித்துள்ளார் நிதி அகர்வால். தனது இன்ஸ்டாகிராம் பதிவில், "பாதிக்கப்பட்டவரை குறை கூறுவது, பிரச்சினையை திசை திருப்புவதாகும்" என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே சிவாஜியின் பேச்சுக்கு தெலங்கானா மகளிர் ஆணையம் விளக்கம் கேட்டு அவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. டிசம்பர் 27ம் தேதி காலை 11 மணிக்கு ஆஜராகி விளக்கமளிக்க உள்ளார். மேலும், தனது பேச்சு சர்ச்சையானதால் மன்னிப்புக் கோரி வீடியோ பதிவொன்றையும் வெளியிட்டுள்ளார் சிவாஜி.

# 'டான் 3' அப்டேட்: ரன்வீர் சிங் விலகல் புதிய நாயகன் யார்?



'டான் 3' படத்தில் இருந்து விலகியிருக்கிறார் ரன்வீர் சிங். இதனால் புதிய நாயகன் யார் என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ரன்வீர் சிங் நடிப்பில் வெளியாகியுள்ள 'துரந்தர்' திரைப்படம் மாபெரும் வசூல் சாதனை செய்து வருகிறது. 20 நாட்களில் ரூ.900 கோடியை தாண்டி வசூல் செய்திருக்கிறது. இதனால் படக்குழுவினர் பெரும் உற்சாகமாகி இருக்கிறார்கள். இதர மொழி டப்பிங் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதன் 2ம் பாகம் மார்ச் 19ம் தேதி வெளியாகவுள்ளது.

'துரந்தர்' படத்தின் வெற்றியால் தனது அடுத்த படங்களின் வரிசையினை மாற்றியமைத்திருக்கிறார் ரன்வீர் சிங். 'துரந்தர்' படத்துக்குப் பிறகு 'டான் 3' படத்தில் நடிக்கவிருந்தார். தற்போது அதிலிருந்து விலகியிருக்கிறார். இவ்வளவு நாட்கள் நடைபெற்று வந்த முதற்கட்டப் பணிகள் அனைத்துமே வீணாகிப் போயிருக்கிறது. தற்போது 'டான் 3' படத்தின் புதிய நாயகன் யார் என்பதில் குழப்பம் நீடிக்கத் தொடங்கியிருக்கிறது.

'டான் 3' படத்துக்கு பதிலாக ஜெய் மேத்தா இயக்கத்தில் உருவாகும் 'ப்ராளே' படத்தில் நடிக்கவுள்ளார். அப்ளாஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படம் ஜோம்பி வகை படமாகும். இப்படத்துக்குப் பிறகு எந்தப் படம் என்பது விரைவில் தெரியவரும்.




# சூர்யாவுக்கு பதில் சிவகார்த்திகேயன்; 'புறநானூறு' டு 'பராசக்தி' சுதா கொங்காரா பகிர்ந்த சம்பவங்கள்

சூர்யாவுக்கு பதில் சிவகார்த்திகேயன் எப்படி உள்ளே வந்தார், 'புறநானூறு' எப்படி 'பராசக்தி' படமாக மாறியது என்பது குறித்து இயக்குநர் சுதா கொங்காரா பேட்டியொன்றில் பகிர்ந்துள்ளார்.

சுதா கொங்காரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'பராசக்தி'. டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் ஜனவரி 10ம் தேதி வெளியாகவுள்ளது. இப்படம் முதலில் 2டி நிறுவனத்தின் தயாரிப்பில் 'புறநானூறு' என்ற பெயரில் உருவாவதாக இருந்தது. அதில் சூர்யா, துல்கர் சல்மான், நஸ்ரியா உள்ளிட்டோர் நடிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

'புறநானூறு' படம் நடைபெறாமல் போனது ஏன், சூர்யாவுக்கு பதில் சிவகார்த்திகேயன் எப்படி உள்ளே வந்தார் உள்ளிட்ட விஷயங்களை பேட்டியொன்றில் பேசியிருக்கிறார் சுதா கொங்காரா. அப்பேட்டியில், "கரோனா காலத்தில் சூர்யாவிடம் சொன்ன கதை இது. வெற்றிமாறனிடம் உதவி இயக்குநராக இருந்த மதிமாறனும் நானும் நெருங்கிய நண்பர்கள். அந்தச் சமயத்தில் நிறைய கதைகள் பேசினோம். அப்போது எனக்கு இந்தக் கதை ரொம்பவே பிடித்திருந்தது.

எனக்கு சூர்யா தான் நெருங்கிய நண்பர் என்பதால் உடனடியாக அவரிடம் சொன்னேன். அவருக்கும் ரொம்பவே பிடித்திருந்தது. அந்தச் சமயத்தில் என்ன நடந்தது என்பது சரியாக தெரியவில்லை. ஒரு பிரச்சினை என்னவாக இருந்தது என்றால், சூர்யாவிடம் தொடர்ச்சியாக படப்பிடிப்பு செய்வதற்கு தேதிகள் இல்லை. இக்கதையினை தொடர்ச்சியாக படமாக்கவில்லை என்றால் படத்தின் செலவு என்பது ரொம்பவே அதிகரித்துவிடும்.

முன்பே சிவகார்த்திகேயனுக்கு ஏதேனும் கதை இருக்கிறதா என்று தயாரிப்பாளர் அருண் விஸ்வா கேட்டிருந்தார். 'புறநானூறு' நடைபெறவில்லை என்றவுடன் மீண்டும் கேட்டார். அப்போது தான் சிவகார்த்திகேயனை சந்தித்து இக்கதையை ஐடியாவை சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் பண்ணலாம் என்று கூறிவிட்டார். தேதிகள் கொடுக்கிறேன், நீங்கள் எங்குச் சொன்னாலும் கையெழுத்திடுகிறேன் என்று கூறினார் சிவகார்த்திகேயன். அப்படித்தான் சிவகார்த்திகேயன் இக்கதைக்குள் வந்தார்" என்று தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசை கண்டித்து மணப்பாறையில் கண்டன ஆர்ப்பாட்டம்



மணப்பாறை, டிச.26-
திருச்சி மாவட்டம் மணப்பாறை கிழக்கு ஒன்றியம், முத்தப்புடையான்பட்டி மாரியம்மன் கோவில் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்வர் திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் உத்தரவின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு அறிவுறுத்தலின்படியும் மத்திய மாவட்ட கழக செயளாலர் க.வைரமணி வழிகாட்டுதல்படி மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை சிதைத்து அண்ணன் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இந்த ஆர்ப்பாட்டத்தை மணப்பாறை கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணன் SAS. ஆரோக்கியசாமி தலைமையேற்றி நடத்தி வைத்தார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை சேர்ந்த காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணை செயலாளர் பழனிசாமி, ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் செந்தில் ,நகர பொறுப்பாளர் சீரா,ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் , மதிமுக ஒன்றிய செயலாளர் சுப்ரமணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தினை சிறப்பித்து தந்தனர். மேலும் ஒன்றிய அவைத்தலைவர் பாண்டியன், ஒன்றிய துணை செயலாளர்கள் சக்திவேல்,தனபாக்கியம் அழகர்சாமி, இளையராஜா, ஒன்றிய பொருளாளர் ராமசாமி,மாவட்ட பிரதிநிதிகள் சந்திரகுமார், தர்மராஜ், கோபிநாத், இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் ஆரோக்கியசாமி, துணை அமைப்பாளர் சரவணன், சிறுபான்மை அணி அமைப்பாளர் அருண் சேசுராஜ், தொழிலாளர் அணி அமைப்பாளர் சின்னதுரை, மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ரெங்கசாமி, ஆவின் இளங்கோ, கபில்தேவ் பழனிசாமி, தமிழ்செல்வன், தனபால், மகளிர் அணி கண்ணகி, மணிமேகலை, வளர்மதி சித்ரா , பழனியம்மாள், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன், ஒன்றிய அமைப்பாளர் கார்த்திக்குமார், அலெக்ஸ் அருண், மேலும் பொதுமக்களும் பெண்களும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.





# தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் விழா



தேவகோட்டை, டிச.26-
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. இராம்நகர் பங்குத்தந்தை வின்சென்ட் அமல்ராஜ் தலைமையில் திண்டுக்கல் லயோலா டெக் பள்ளி இயக்குநர் அருட்தந்தை கிளாட்வின்,தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் அருட்தந்தை லெனின்,திருத்தொண்டர் மைக்கேல் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினார்கள். இந்நிகழ்வில் இராம்நகர் பங்கின் பிரிட்டோ இளையோர் இயக்கம் சார்பில் யேசு கிறிஸ்து பிறந்த நிகழ்வை சிறப்பாக செய்து காண்பித்தார்கள். திருப்பலியின் முடிவில் பங்கின் அன்பியங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் குடில் நிகழ்ச்சியை சிறப்பாக செய்து காண்பித்த முதல் மூன்று இடங்களை பெற்ற அன்பியங்களுக்கு கேடயமும், கிராமங்களில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற கிராமத்திற்கு கேடயமும் பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், இராம்நகர் பங்கு இறைமக்கள், கிளை கிராம இறைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம், தங்கக் கோயிலில் ஸ்ரீ சக்தி அம்மாவின் ஜெயந்தி விழா

வேலூர், டிச.26-
வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அரியூர் அடுத்த திருமலைக்கோடி, புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீ புரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் ஆண் டுதோறும் ஸ்ரீசக்தி அம்மாவின் ஜெயந்தி விழா, மிகுவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. பல்வேறு சமூக நலத்திட்டங்களை ஸ்ரீ சக்தி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள், 03.01.2026 அன்று ஸ்ரீசக்தி அம்மா 50ஆம் ஜெயந்தி விழாவை முன்னிட்டு 10008 ஏழை ஏழை எளியோருக்கு சேலைகள் வழங்கும் விழா 22.12.2025 திங்கட்கிழமை ஸ்ரீ சக்தி அம்மாவின் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் ஸ்ரீபுரம் பொற்கோயில் இயக்குனர் மற்றும் அறங்காவலர் டாக்டர். எம். சுரேஷ்பாபு மற்றும் ஸ்ரீநாராயணி மருத்துவமனை இயக்குநர் மற்றும் அறங்காவலர் டாக்டர். பாலாஜி ஸ்ரீநாராயணி பீடம் அறங்காவலர் சௌந்திரராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் நிர்வாகிகள் செய்திருந்தனர். இவ்விழாவில் கலவை சச்சிதானந்த சுவாமிகள் மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழும அறங்காவலர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளூர் வெளியூர் பக்தர்கள் என ஆயிரக்கணக்கானோர் திரளாக கலந்து கொண்டனர்.



# கீழடி அருங்காட்சியத்தைப் பார்வையிட்ட கல்லல் முருகப்பா பள்ளி மாணவர்கள்



சிவகங்கை, டிச.26-
சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 65 மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் மாரிமுத்து அமுதா உமாராணி கற்பகவல்லி ஆகியோருடன் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையின் கம்பீரத்தை வியந்து பார்த்தனர் . மதுரை விமான நிலையத்தில் சிறப்பு அனுமதி பெற்று விமான புறப்படுதலை அதிசயித்துப் பார்த்தனர் . முன்னதாக கீழடி அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டனர். சுமார் 2 மணி நேரம் அங்கு செலவிட்டவர்கள் அருங்காட்சியக கலைக் கூடங்களில் இடம் பெற்றிருந்த தொல்லியல் சான்றுகளைப் பார்வையிட்டு பழங்கால தமிழர்களின் வாழ்க்கை முறை, அவர்கள் பயன்படுத்தியப் பொருள்கள், தமிழர்களின் கடல் சார் வணிகம், தமிழ் எழுத்துக்கள் போன்றவற்றை பேரார்வத்துடன் கண்டு களித்தனர். மேலும் அருங்காட்சியகத்தில் உள்ள உள்ளரங்கத்தில் காண்பிக்கப்பட்ட ஒலி ஒளிக் காட்சி மூலம் மனிதர்களின் வாழ்க்கை முறை மற்றும் நாகரிக வளர்ச்சியைக் கண்டு ரசித்தனர். கல்விச் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை ஆசிரியர் பிரபு ஒருங்கிணைத்தார்.



# சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் குருபூஜை: சேர்மன் சி. எம்.துரை ஆனந்த் காங்கிரஸ் சி. ஆர். சுந்தரராஜன், சஞ்சய் காந்தி பங்கேற்பு

சிவகங்கை, டிச.26-
சிவகங்கையை ஆண்ட ராணியான வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 229 வது குருபூஜையையொட்டி நேற்று சிவகங்கை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அரண்மனை வாசல், தெப்பக்குளம் அருகே அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நகர் திமுக சார்பில் சிவகங்கை நகர்க்கழக செயலாளரும் நகர்மன்றத் தலைவருமான சி. எம். துரை ஆனந்த் தலைமையில் திமுகவினர் ஊர்வலமாகச் சென்று நினைவிடத்தில் மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் கவுன்சிலர் அயூப் கான், மூத்த நகர்மன்ற உறுப்பினர் மாவட்ட பிரதிநிதி சுப. ஜெயகாந்தன்,நகர்க்கழக நிர்வாகிகள் என். விஜயகுமார், கவுன்சிலர் துபாய் காந்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் இராஜேஷ்வரி அண்ணாதுரை, கழக மூத்த முன்னோடி ஆர்.டி. சேகர், நாகநாதர் ம. நாச்சியப்பன், ஜெயக்குமார், தேவஸ்தானம் முருகேசன், அரசனேரி வேல்முருகன், சௌந்திரராஜன், பழக்கடை சாரதா, உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் கட்சி மரியாதை செலுத்தினர்.

இதன் பின்னர் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் ,

சிவகங்கை மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி, நகரத் தலைவர் கவுன்சிலர் விஜயகுமார், ஆகியோரது தலைமையில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் வீரமங்கை வேலுநாச்சியார் சிலைக்கு மாலை அணிவித்து பின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர், வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்கப் பட்டயத்தலைவர் ஸ்ரீ வித்யா கணபதி, கே.ஆர்.வி.இராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர் ஏ என் சோனை, மாவட்ட சிறுபான்மை தலைவர் மஹாராணி சையது இப்றாஹீம், சண்முகராஜன், வட்டாரத் தலைவர்கள் கரும்பாவூர் உடையார் , காளையார்கோவில் மதியழகன், மாநில மகளிரணி துணைத் தலைவர் ஏலம்மாள் இராஜேந்திரன், காங்கிரஸ் எஸ். எஸ்டி மாநில செயலாளர் மேலமங்கலம் முரளீதரன், லெட்சுமணன், ஒ புதூர் சீனிவாசன், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...






■ தாய் அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு தவழ் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் சார்பாக, நேற்று வீரமங்கை வேலுநாச்சியாரின் 229 குருபூஜை விழாவை முன்னிட்டு சிவகங்கையில் அமைந்துள்ள அவர்களது மணிமண்டபத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் தவழும் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் மாநில தலைவர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினரும் மானாமதுரை நகர மன்ற நியமன உறுப்பினரான புஷ்பராஜ் , கவிஞர் பட்டிமன்ற பேச்சாளர் ராமச்சந்திரன், சிவகங்கை நகர் மன்ற நியமன உறுப்பினர் தனலட்சுமி வெங்கடேசன் மற்றும் தாய் இல்ல உறவுகளும் சென்று கலந்து கொண்டனர்



# மக்கள் சமூக நீதி பேரவை மற்றும் குரும்பா சங்கத்தினர் இணைந்து கோவையில் ஆர்ப்பாட்டம்

கோவை, டிச.25-
சமூக நல்லிணக்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் குரும்பா சமுதாயத்தினரை அவதூறாக பேசிய வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆண்கள் பெண்கள் என திரளானோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பு.

கோவையில் குரும்பா சமுதாய மக்களை அவமதிக்கும் விதமாக கடுமையான சொற்களை பயன்படுத்தி அவதூறாக பேசிய வழக்கறிஞர் பரமசிவம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மக்கள் சமூக நீதி பேரவை மற்றும் குரும்பா சங்கத்தினர் இணைந்து கோவையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்..

செஞ்சிலுவை சங்கம் முன்பாக நடைபெற்ற இதில்,சமுதாய நல்லிணக்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வழக்கறிஞர் பரமசிவம் என்பவர் அண்மையில் குரும்பா சமுதாய மாநில தலைவரை அவதூறாக பேசியுள்ளதாகவும்,இதனை தொடர்ந்து தமிழகம் முழுவதும் அவர் மீது காவல் துறையில் புகார் அளித்துள்ளதாக தெரிவித்தனர்.

ஆனால் இதுவரை அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாததை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கண்டன கோஷங்களை எழுப்பினர்..

இது குறித்து மக்கள் சமூக நீதி பேரவை மற்றும் குரும்பா சங்கத்தின் தலைவர் மனோகரன் மற்றும் குரும்பா சங்க கோவை மாவட்ட தலைவர் கல்பனா வேலுசாமி ஆகியோர் கூறுகையில், தமிழகத்தில் குறிப்பிட்ட சமுதாய மக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் பேசியுள்ள வழக்கறிஞர் பரமசிவம் மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்..

ஆர்ப்பாட்டத்தில் சமூக நீதி கூட்டமைப்பு, மக்கள் சமூக நீதி பேரவை, தமிழ்நாடு குரும்பர் சமுதாய சங்கம் என பல்வேறு அமைப்புகளை சேர்ந்த ஆண்கள் பெண்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கண்டரமாணிக்கத்தில் நாளை சிறப்பு மருத்துவ முகாம்

கல்லல், டிச.26-
சிவகங்கை மாவட்டம் கல்லல் வட்டாரம் கண்டரமாணிக்கம் சேது ஐராணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் சிறப்பு மருத்துவ முகாம் நாளை டிசம்பர் 27 நடைபெறுகிறது. முகாமில் 17 சிறப்பு மருத்துவ துறைகள் மூலம் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும். இங்கு ரத்த பரிசோதனை, இசிஜி உள்ளிட்ட பரிசோதனை இலவசமாக வழங்கப்படும். பொது மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, பல், எலும்பு, நரம்பியல், மனநல மருத்துவம், சர்க்கரை நோய், நுரையீரல் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர்கள் பரிந்துரைப்படி எக்கோ ,எக்ஸ்ரே, ஸ்கேன் எடுக்கப்படும். முகாமிற்கு ஆதார் அட்டையுடன் வரவேண்டும். முதல்வரின் காப்பீடு அட்டை பெற ரேஷன் கார்டு, குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூபாய் 1.20 லட்சத்திற்குள் இருப்பதற்கான சான்றுடன் வர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த முகாமில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு மருத்துவ சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தனித்துவம் வாய்ந்த அட்டை, காப்பீடு அட்டை ஆகியவற்றிற்கு பதிவு செய்யப்படும்.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு திட்டம், இலவச ரயில், பேருந்து பயண அட்டை, உதவித்தொகை, உபகரணங்களுக்கான பதிவுகளும் செய்யப்படும் என கல்லல் வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு க. சங்கீதா தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161